# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020–தரம் 09
## First Term Examination – 2020–Grade 09

| | | | | |
|---|---|---|---|---|
| சைவநெறி | 12 | T | I, II | |
| சுட்டெண் Index No | | | | சைவநெறி |

பகுதி - I

**சரியான விடையைத் தெரிவு செய்க**

1. சிவன் சோதிப்பிளம்பாக தோன்றிய ஆலயம்
   1. திருவண்ணமலை  2. தில்லை
   3. திருவாரூர்  4. திருக்குறுக்கை வீரட்டம்

2. "பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே…" என இறைவனைப்பாடியவர்
   1. சம்பந்தர்  2. சுந்தரர்  3. சேக்கிழார்  4. மருணீக்கியார்

3. படைத்தல், காத்தல் தொழிலைச் செய்வோர் முறையே
   1. உருத்திரன், பிரம்மா  2. பிரம்மா, மகேஸ்வரன்
   3. பிரம்மா, விஸ்ணு  4. சதாசிவன், விஸ்ணு

4. "விழுப்பம்" என்பதன் பொருள்
   1. அமைதி  2. அகிம்சை  3. சத்தியம்  4. மேன்மை

5. மகாபாரதத்தில் தருமர் எப்பண்பின் மேன்மையால் சிறப்பிக்கப்படுகின்றார்?
   1. கோபம்  2. சகிப்புத்தன்மை  3. ஈதல்  4. நேரம் தவறாமை

6. மார்க்கண்டேயரின் உயிரினைப்பாதுகாத்த மந்திரம்
   1. சிவாயநம  2. சிவசிவ  3. நமசிவாய  4. ஓம்

7. நமச்சிவாயப்பதிகம் பாடியவர்
   1. அப்பர்  2. சுந்தரர்  3. சேக்கிழார்  4. சம்பந்தர்



kalvi.lk

8. சர்வலோக நாயகனாக விளங்குபவர்

1. பிள்ளையார் 2. சிவபெருமான் 3. முருகன் 4. விஸ்ணு

9. வெள்ளிக்கிழமைக்குரிய கிரகம்

1. சூரியன் 2. சந்திரன் 3. சுக்கிரன் 4. குரு

10. பஞ்சாங்கத்தில் உள்ள திதிகள், கரணங்கள் முறையே

1. 30, 60 2. 27, 30 3. 60, 30 4. 07, 30

11. "நாளும் கோளும் சம்பரடியார்க்கு நலிவு செய்யா" எனப் பாடியவர்

1. மாணிக்கவாசகர்
2. திருஞான சம்பந்தர்
3. மருணீக்கியார்
4. சுந்தரர்

12. சைவப்புலவர் அருணாச்சலம் அவர்களுக்கு மட்டக்களப்பு தமிழ் கலைமன்றம் வழங்கிய கௌரவப்பட்டம்

1. தேசிக மணி
2. தேசிகர்
3. சித்தாந்த சிகாமணி
4. சைவப்புலவர்

13. தேசிகர் இறைவனடி சேர்ந்த வயது

1. 81 2. 16 3. 60 4. 32

14. சிவன் மன்மதனை எரித்த தலம்

1. சிதம்பரம்
2. திருக்குறுக்கை வீரட்டம்
3. திருவாரூர்
4. திருப்பாண்டிக் கொடுமுடி

15. ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவர்

1. சம்பந்தர் 2. அப்பர் 3. ஆறுமுகநாவலர் 4. சுந்தரர்

16. முத்தமிழ் வித்தகராக விளங்குபவர்

1. விபுலானந்தர்
2. அருணாசல தேசிகர்
3. விவேகானந்தர்
4. இராம கிருஸ்ணா



kalvi.lk

17. “தென்புலத்தார்” எனப் போற்றப்படுபவர்

1. பெரியவர்கள்
2. இறந்த மூதாதையர்
3. ஞானிகள்
4. அறிஞர்கள்

18. “யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி” என்று கூறியவர்

1. திருமூலர்
2. சேந்தனார்
3. சேக்கிழார்
4. திருமாளிகைத் தேவர்

19. நட்சத்திரங்களின் எண்ணிக்கை

1. 26
2. 30
3. 27
4. 12

20. தமிழ் வருடங்களில் தற்போதைய (2020) வருடத்தின் பெயர்

1. விகாரி
2. சுபகிருது
3. சர்வாரி
4. பிலவ

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி - II

Education கல்வி அධ්‍යාපන

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களில் விரும்பிய இரண்டினை எழுதி பாடியவர் பண் என்பவற்றையும் தருக.

1. “காதலாகிக் கசிந்து…………….”
2. “துஞ்சலும் துஞ்சல் இல்லாத…………”
3. “காப்பதோர் வில்லும் அம்பும்…………………..”
4. “இல்லக விளக்கது……………..”

(6 x 2 = 12 புள்ளிகள்)

02. **“மேன்மையைத் தருவன விழுமியங்கள் ஆகும்”**

1. மனிதனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் எவை?
2. மனித விழுமியங்கள் ஊடாக கட்டியெழுப்பக் கூடிய அம்சங்கள் 2 தருக.
3. சகிப்புத்தன்மை தொடர்பான திருக்குறள் ஒன்றை குறிப்பிட்டு விளக்குக.
4. நாம் வெற்றி இலக்கை அடையும் வழிகள் நான்கு தருக.

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

03. **“வானியல் அறிவின் பெறுபேற்றுக்கள் ஒன்றே பஞ்சாங்கம்”**

1. பஞ்சாங்கம் என்றால் என்ன?
2. திதி என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
3. பஞ்சாங்கத்தின் ஐந்து உறுப்புக்களும் எவை?
4. நமது நாட்டில் பயன்படுத்தப்படும் பஞ்சாங்கங்கள் எவை? அவை எவற்றின் அடிப்படையில் எழுதப்பட்டவை?

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

04. **“சைவ சமய வளர்ச்சிக்கு அருந்தொட்டாற்றிய சமயப் பெரியார்கள் பலர் வாழ்ந்த திருநாடு ஈழநாடு”**

1. சைவ வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய இருவரைக் குறிப்பிடுக.
2. அருணாசலதேசிகருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் எவை?
3. அருணாசலதேசிகரால் ஆக்கப்பட்ட நூல்கள் 4 தருக.
4. அருணாசலதேசிகர் ஆற்றிய சமயப்பணிகள் 4 தருக.

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

05. **“மனிதன் சீரிய ஒழுக்கத்துடன் வாழ்வதற்கே நான்கு படிநிலைகளும் அமையப்பெற்றன”**

1. மனிதனின் நான்கு படிநிலைகளும் எவை?
2. ஈழத்தில் பிதிர்க்கடன் நிறைவேற்றும் தலங்கள் எவை?
3. திருவள்ளுவர், இல்லறத்தாரின் கடமைகள் எவை என வலியுறுத்துகின்றார்.?
4. “விருந்து ஓம்புதல்” என்பதன் ொபருளை விளக்கி பெரிய புராணம் குறிப்பிடும் விருந்தோம்பலில் மேன்மை பெற்ற அடியவர்கள் இருவரைத் தருக.

(2 + 2 + 4 + 4 = 12 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. கூட்டுப்பொறுப்பு
2. தேவ வழிபாடு
3. இறை தத்துவம்
4. மனித விழுமியங்கள்

(2 x 6 = 12 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page